TAMIL SOLIDARITY
For the rights of workers & all oppressed people in Sri Lanka
இலங்கையில் ஒடுக்கப்படும் அனைவரது உரிமைகளுக்கும் போராடும்
-தமிழ் தோழமை இயக்கம்.

205 Well Street
London E9 6QU
0044 790 8050 217
info@tamilsolidarity.org
www.TamilSolidarity.org

26/02/2018

25-02-2018 புலம்பெயர் அமைப்புக்கள் பொதுக் கூட்டத்தில் தமிழ் சொலிடாரிட்டியால் முன் வைக்கப் பட்ட கருத்துக்கள்.

முள்ளிவாய்க்கால் படுகொலை நடந்து பத்து வருடங்கள் ஆகப் போகிறது. இந்தப் பத்து வருசத்தில் புலம் பெயர் அமைப்புக்கள் எதைச் சாதித்துள்ளன என்ற கேள்வி முழுமையாக ஆராயப் படவேண்டியது அவசியம்.

அதிகார சக்திகளுக்கூடாக தீர்வு என்ற போக்கு தோல்வியை தழுவி விட்டது என்பதை நாம் இனியாவது ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் தமிழ் தேசிய கூட்டமைப்பும் மற்றும் சில புலம் பெயர் அமைப்புக்கள் சிலவும் அதிகார சக்திகளுடன் தமது நெருக்கத்தை அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இது மக்கள் அரசியலில் இருந்து தூர விலக உதவி இருக்கிறதே தவிர எந்த வெற்றிகளையும் தரவில்லை.

நாம் மீண்டும் மக்களை திரட்டும் அரசியல் நோக்கி நகரவேண்டுமாயின் அதிகார சக்திகளுக்கும் மக்கள் அமைப்புக்குமான உறவுமுறை பற்றி மீள் ஆய்வு செய்யவேண்டும்.

## மக்களைத் திரட்டல் முதன்மைப் பட வேண்டும்.

1. ஐக்கிய நாடுகள் – மற்றும் அரசுகளை லொபி செய்வதை முதன்மைப் படுத்தி இயங்குவது மாற வேண்டும். ஐ.நா வுக்குளால் தீர்வு என்ற பிரச்சாரங்கள் நிறுத்தப் பட வேண்டும். ஐ.நா மற்றும் அதிகார சக்திகளைத் தமிழ்பேசும் மக்களின் நட்புச் சக்திகளாகப் பார்த்தல் முடிவுக்கு வரவேண்டும். பதிலாக போராட்டச் சக்திகளுடன் நட்பை பலப்படுத்த முழு முயற்சி செய்யவேண்டும். அதிகார அமைப்புக்கள் நோக்கிய நகர்வு அவர்களுடனான போராட்ட அணுகுமுறை கொண்டதாக இருக்க வேண்டுமே தவிர அவர்தம் நலன்களை தமிழ் மக்கள் மத்தியில் பலப்படுத்துவதாக இருக்க முடியாது.

ஐ.நா செல்லவேண்டாம் என்பதல்ல நாம் சொல்வது. அணுகுமுறை மாற வேண்டும்.

2. ஒவ்வொரு வருடமும் நடக்கும் முள்ளிவாய்க்கால் நினைவு ஒரு எழுச்சி நாளாக இருக்க வேண்டும்.

இந்த நினைவு நாளில் ஒடுக்கும் சக்திகளுக்கு மேடை வழங்குவது – ஒடுக்குமுறை ஏகாதிபத்திய சின்னங்களை ஏற்றுவதை கடுமையாக எதிர்க்கிறோம். ஈழத்து தேசியக் கொடி மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கக் கொடி ஆகியன இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக மரியாதை செய்யப்பட வேண்டும். ஆனால் எழுச்சி அரசியல் முதன்மைப் பட்ட நிகழ்வாக இது நடத்தப் பட வேண்டும். தற்போதைய உலகளாவிய – இலங்கை – ஈழ அரசியல் முன்னோக்குப் பற்றியும் – அமைப்புக்களின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை அறிவுக்கும் நிகழ்வாகவும் இது இருக்க வேண்டும். மக்கள் அழுவதற்காக மாட்டும் திரண்டு வரும்படி கேட்க முடியாது. அரசியலை அறிய திரளுங்கள் என கேட்க வேண்டும். முள்ளிவாய்க்கால் அந்த நாளாக –எழுச்சி நாளாக இருக்க வேண்டும். மக்களை மந்தப்படுத்தும் நாளாக இது இருக்கக் கூடாது.

TAMIL SOLIDARITY
For the rights of workers & all oppressed people in Sri Lanka
இலங்கையில் ஒடுக்கப்படும் அனைவரது உரிமைகளுக்கும் போராடும்
-தமிழ் தோழமை இயக்கம்.

205 Well Street
London E9 6QU
0044 790 8050 217
info@tamilsolidarity.org
www.TamilSolidarity.org

3. மக்கள் மத்தியில் அரசியல் கலந்துரையாடல்கள் – விவாதங்களை வெளிப்படையாக செய்ய எல்லா அமைப்புக்களும் முன்வரவேண்டும். ஒவ்வொரு அமைப்பும் தமது அரசியல் நிலைப்பாடு மற்றும் செயற்பாடுகள் பற்றி மக்களுக்கு வெளிப்படையாக அறியத் தருவது முக்கியம்.

4. ஒவ்வொரு அமைப்பும் தாம் செலவு செய்யும் பண விபரங்களை மக்கள் முன் வைக்க வேண்டும். மக்களின் நலனுக்காக என சொல்லிச் செலவு செய்யப்படும் பணம் அனைத்தும் எவ்வாறு செலவு செய்யப் படுகிறது என்பதை அறிய மக்களுக்கு முழு உரிமை உண்டு. முழு விபரங்களை வெளியிட முடியாத நிலையில் செயற்பாடுகளுக்கு செலவாகும் குறைந்த பட்ச நிதி நிலவரங்களையாவது மக்கள் முன் வைக்க வேண்டும்.

## ஈழத்து மக்களுக்கான உதவிகள்

1. மாவீரர் நாள் போன்ற முக்கிய நினைவு நாள்கள் டாம்பீகமாக நடத்தப்படாமல் சேர்க்கப் படும் பணம் முன்னாள் போராளிகளுக்கும் –வறுமையில் வாடும் குடும்பங்களுக்கும் வழங்கப் படவேண்டும்.

2. எத்தகைய உதவிகள் வழங்கப் பட்டு வருகிறது என்பது வெளிப்படையாக முன் வைக்கப் படவேண்டும். ஒரு மத்திய கமிட்டி இதற்கு உருவாக்கப் படவேண்டும். உதவி விபரங்கள் குறைந்த பட்சம் அந்த மத்திய கமிட்டிக்காவது தெரிந்திருக்க வேண்டும்.

3. மக்களை கை ஏந்திகளாக வைத்திருக்கும் நடவடிக்கைகளை செய்துவரும் நிறுவனங்கள் – அரசுடன் இணைந்து மக்களின் போராட்ட குணங்களை மழுங்கடிக்கும் வேலை செய்யும் அமைப்புக்கள் பற்றிய விபரங்கள் மக்கள் மத்தியில் தெரியப் படுத்த வேண்டும். உதவிகள் செய்வோர் போராட்ட அமைப்புக்களுக்கு எதிரான பிரச்சாரங்களில் ஈடுபடுவது தவிர்க்கப் படவேண்டும்.

## இறுதியாக
## எத்தகைய ஒற்றுமை பற்றி நாம் பேசுகிறோம்?

தமிழ் சமூகம் பெருமளவில் ஒன்றுபட்ட சமூகம். எல்லா அமைப்புக்களும் ஒன்று பட்ட குரலில் பிரியங்கா பெர்னாண்டோவுக்கு ஒரு எதிர்ப்புக் குரலை வைத்தது போன்ற நடவடிக்கையை வேறு எங்கும் பார்க்க முடியாது. ஒற்றுமை பற்றி தமிழ் மக்களுக்கும் அமைப்புகளுக்கும் போதிக்க வரும் அதிகார சக்திகளின் போலிக் கரிசனையை திட்ட வட்டமாக நாம் மறுக்கிறோம்.

இருப்பினும் எந்த சமூகத்திலும் முழு ஒற்றுமை என்பது சாத்தியமில்லை. எல்லாச் சமூகமும் வர்க்க அடிப்படையில் உடைந்திருப்பவைதான். அதிகாரச் சக்திகளும் அவர்கள் சார் அமைப்புக்களும் –மக்களும் மக்கள் சார் அமைப்புக்களும் என்ற இரண்டு முக்கிய பிரிவுகள் எல்லாச் சமூகங்களிலும் உண்டு. இதற்கு தமிழ் சமூகமும் விதி விலக்கல்ல.

205 Well Street
London E9 6QU
0044 790 8050 217
info@tamilsolidarity.org
www.TamilSolidarity.org

அதிகார சக்திகளை நட்போடு நோக்கி இயங்கும் அமைப்புக்களுக்கு அதன் மேல் இருக்கும் கவர்ச்சி குறையப் போவதில்லை. அதிகார சக்திகளின் அமைப்புக்கள் – நிறுவனங்கள் – ஊடகங்கள் – மற்றும் மேடைகளில் பவனி வரும் கவர்ச்சியில் இருந்து சிலர் மீளப் போவதில்லை. இதற்கு மாறாக மக்கள் அதிகாரத்தை பிடிக்க வேண்டும் என நாம் பேசுகிறோம். அங்கிருந்துதான் எமது மக்கள் சார் அரசியல் கருத்துக்களும் செயற்பாடுகளும் பிறக்கின்றது.

இதனால்தான் இரண்டாகப் பிரியும்படி மக்களையும் செயற்பாட்டாளர்களையும் அழைக்கிறோம். நீங்கள் அரசியலில் எந்தப் பக்கம் நிற்க விரும்புகிறீர்கள்?

அதிகார சக்திகளுக்கு எதிரான மக்கள் திரட்சியை முதன்மைப் படுத்தி இயங்கத் தயாரா?

எமது பலத்தை அரசியல் ரீதியாக சரியான வழியில் –ஒடுக்கப்படும் மக்கள் பக்கம் நிற்கும் சக்திகளோடு இணைக்கத் தயாரா ?

போராட்ட அரசியல் நோக்கி நகரத் தயாரா?

இத்தகைய அரசியல் அடிப்படையில் ஒரு ஒற்றுமையை கட்டி எழுப்ப விரும்புகிறோம். அந்த ஒற்றுமையே சமரசமின்றி மக்கள் பக்கம் பலமாக நிற்கும் ஒற்றுமையான சக்தியாக இருக்க முடியும்.

தொடர்புகளுக்கு
மதன்
தேசிய ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர், தமிழ் சொலிடாரிட்டி
mathan@tamilsolidarity.org
07454471030